ஆண்டு பட்டிகை வழக்கு எண்.175/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 175/2025 | LW- 5 | PW- 3 |
| Name | : சிவக்குமார் ( பார்வை மகஜர் சாட்சி) | | |
| Father's Name | : ராமலிங்கம் | | |
| Village | : சமுத்திராப்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 28/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of May 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வாகன ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 22.01.2025ம் தேதி காலை சுமார் 8.00 முதல் 8.45 மணியளவில் சமுத்திராப்பட்டியில் உள்ள முருகன் கோவில் அருகே விபத்து நடந்த இடத்தில் வைத்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரணை செய்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், ராஜ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2. எழுதாத பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை பற்றிய விபரங்கள் நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு கிழக்கே 50 அடி தூரத்தில் போலீசார் அவுட் போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். அது திண்டுக்கல் – காரைக்குடி ரோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு வடபுறமாக சிறுகுடி செல்லும் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். போலீஸ் அவுட் போஸ்ட் ஆனது பல வருடங்களாக உள்ளது என்றால் சரிதான். போலீஸ் அவுட் போஸ்ட் தென்புறம் உள்ளது என்றாலும், சாலையின் குறுக்கே 4 பேரிகார்டு உள்ளது என்றாலும் சரிதான். காரைக்குடியில் இருந்து வரும் வாகனங்கள் ஆனது சுமார் 10 கி.மீ. வேகத்தில்தான் கடக்க முடியும் என்றால் சரிதான். திண்டுக்கலில் இருந்து வாகனம் பேரிகார்டு அருகில் வந்தால் காரைக்குடியில் இருந்து வரும் வாகனங்கள் நின்றுதான் வர முடியும் என்றால் சரிதான். சிறுகுடியில் இருந்து ஒரு வாகனம் சாலையை அடைந்தால் காரைக்குடியில் இருந்து வரும் வாகனங்கள் நின்றுதான் வர முடியும் என்றால் சரிதான்.

3. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் போலீஸ் அவுட் போஸ்ட் உள்ளதையும், பேரிகார்டு தடுப்புகள் உள்ளதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். வரைபடத்திலும் கிழக்கு பக்கம் போலீஸ் அவுட் போஸ்ட் உள்ளதையும், பேரிகார்டு தடுப்புகள் உள்ளதையும் காட்டவில்லை என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடம் வந்து பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும், வரைபடம் வரையவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து வரைபடம் தயார் செய்யப்பட்டிருந்தால் போலீஸ் அவுட் போஸ்ட் மற்றும் பேரிகார்டு தடுப்புகள் இருப்பதை குறிப்பிட்டிருப்பார் என்றாலும், அதனால் நான் சொல்வது தவறானது

**என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் பின்னிட்டு தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.05.12 13:49:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்